1982 செப்டம்பர் 7]

திரு. கு. ரமணி: வறட்சி பற்றி ஒரு மணி நேர விவாதம் என்று சொல்கிறார்கள். ஒரு மணி நேர விவாதம் போதாது. ஒரு நாள் விவாதம் வைத்துக்கொள்ள வேண்டும். இன்றைக்கு வறட்சியின் காரணமாக மக்கள் குடிநீர் இல்லாமல், விவசாயத்திற்கு நீர் இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். அன்றைக்குப் பேசும் போது ஒரு மணி நேர விவாதம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு மணி நேர விவாதம் போதாது. ஒரு நாள் விவாதம் வைத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. என். ஏ. பூங்காவனம்: வறட்சியைப் பற்றி இப்போது எடுத்துக்கொள்ளப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைப்பற்றி உங்களுக்கு நோட்டீஸ் வரும். அப்போது தெரிந்துகொள்ளுங்கள்.

திரு. ந. சிவஞானம்: மேட்டூர் அணைக்குத் தண்ணீர் வரவு குறைவாக இருக்கிறது. அதனால் தஞ்சாவூர் மாவட்டத்தில் விவசாயம் பாதிக்கப்பட்டிருக்கிறது. அதைப் பற்றி விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏற்கனவே நான் சொன்னேன். காவேரி பிரச்சனை வறட்சியில் வருகிறது. அதனால், எல்லாம் ஒரே பிரச்சனைதான். அப்போது இதையும் சேர்த்து பேசிக் கொள்ளலாம்.

(ஈ) எஸ். ஐ. ஈ. டி. கல்லூரிப் பிரச்சனை.

திரு. அ. ரகுமான்கான்: எஸ். ஐ. ஈ. டி. பிரச்சனைப் பற்றிய ஒத்திவைப்புத் தீர்மானத்தை இப்போது எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கல்வி சம்பந்தப்பட்ட மசோதா வருகிறது. அதைப்பற்றி அதிலே பேசிக்கொள்ளலாம்.

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வி அமைச்சர் அவர்கள் கொண்டுவருகிற மசோதா பொதுவான பிரச்சனைப் பற்றியது. ஆனால் நான் கொடுத்து இருக்கிற ஒத்திவைப்புத் தீர்மானம் எஸ்.ஐ ஈ.டி. கல்லூரியைப் பற்றியது. கல்வி மசோதாவிலே இந்தக் குறிப்பிட்ட சம்பவத்தைப் பற்றி பேசி விடமுடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கல்வி மசோதாவிலே யாரும் இதைப்பற்றி பேசாவிட்டால் அப்போது இதைப்பற்றி கவனிக்கலாம்.

திரு. அ. ரகுமான்கான்: இதற்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை. இது தனிப்பட்ட கல்லூரி பற்றிய பிரச்சனை. அதனால் தான் விதி 55-ஐப் பயன்படுத்தி ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்து இருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; It depends upon your interpretation. நீங்கள் தருகிற விளக்கம் தனிப்பட்டது.

திரு. அ. ரகுமான்கான்: தமிழ்நாட்டிலுள்ள எல்லா கல்லூரிகளையும் பொறுத்தது அந்த மசோதா. ஆனால் நான் கொடுத்து இருப்பது எஸ்.ஐ.ஈ.டி. பிரச்னைப் பற்றி. அதிலே தனியாக பேசினால்தான் அரசாங்கத்தின் அணுகு முறை எப்படி இருந்தது? எப்படி இருக்கிறது என்பதைப் பற்றி தெரிந்து கொள்ளமுடியும்.

3. அரசினர் சட்ட முன்வடிவுகள்

(அ) அண்ணாமலைப் பல்கலைக் கழகச் சட்டமுன்வடிவு, 1982.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, 1982ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக் கழகச் சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றுப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(முற்பகல் 10-20)

(ஆ) எதிர்பாராச் செலவு நிதி (மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1982.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு எதிர்பாராச் செலவு நிதி (மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவு*(சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 35/1982) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்.

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு மன்றத்தினுடைய தலைவர் அவர்களே, இங்கே நம்முடைய நிதியமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கின்ற இந்தச் சட்டமுன்வடிவானது சத்துணவுத் திட்டத்திற்கு எதிர்பாராச் செலவு நிதியில் 50 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது செலவாகிவிட்டது என்பதால் மீண்டும் 50 கோடி ரூபாய் அனுமதிக்கப்படவேண்டும் என்று அமைச்சர் அவர்கள் இந்தச் சட்டவடிவைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்தக் கூட்டத் தொடருக்கு முன்பாக நிதியமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையை இந்த மன்றத்திலே சமர்ப்பித்தபோதும் அதைப்பற்றி விவாதம் இங்கே நடைபெற்றபோதும் அவர்கள் இதைப்பற்றி குறிப்பிட்டிருக்

* * 1982 செப்டம்பர் 6 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.